புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# அக இலக்கியத்தில் சிறந்த மருத்துவர் - தோழி

முனைவர் அ.இராஜலட்சுமி
உதவிப்பேராசிரியர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோய்மபுத்தூர்-641029

ஆய்வு நோக்கம்

மனநலமே மன்னுயிர்க்கு ஆக்கம் என்று வள்ளுவர் கூறுவது போல் ஒருவன் தனது மனத்தைக் காத்தால், உடல் நலம் சீராகும் என்பதைப் பல சங்கப் பாடல்கள் வழி எடுத்துக் காட்டுவதே இவ்வாய்வின் நோக்கம். தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், பரத்தை, பாங்கன், பாணன் என்று பல மாந்தர்களின் கூற்றுகளாக சங்க அகப்பாடல்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு கருத்தைத் தனக்குள் தாங்கிக் கொண்டும் ஏந்திக் கொண்டும் வருகின்றன. அந்த ஒவ்வொரு கருத்துகளில் உள் பொதிந்திருக்கும் மனநலத்தையும், சில பாடல்களில் காணப்படும் மன நோய்க்கான காரணத்தையும் அந்த நோய் தீர்க்கும் மருந்தாளனாக செயல்பட்ட தோழியின் தன்மையையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## முன்னுரை

அகத்திணையானது களவு. கற்பு என்ற இரு வகையாகப் பிரிக்கப்படுகிறது. அகத்திணைக் கூற்றுப் பாடல்களில் தலைவன், தலைவியே முதன்மை மாந்தர்களாக உள்ளனர். களவில் இயற்கைப்புணர்ச்சியுடன் காதலை ஆரம்பிக்கும் தலைவன், தலைவியது காதல் இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியற் கூட்டம் என்று தொடர்ந்து பல நிகழ்வுகளில் நடைபெற்றுக் கொண்டே வருகின்றது. அவர்களது களவு வாழ்க்கையிலும் கற்பு வாழ்க்கையிலும் அவர்களுடன் பங்கு கொண்டு கூற்று நிகழ்த்த பல மாந்தர்கள் இருப்பினும் தோழி என்பவள் துணைமை மாந்தர்களின் முதன்மையானவளாகக் கருதப்படுகிறாள். தலைவன், தலைவி, தோழி போன்றோரின் வாழ்க்கை ஐந்திணை நிலங்களுக்கு ஏற்ப மாறும் தன்மை கொண்டது. ஆனால் அவர்களது மனநிலை பெரிதும் ஏதேனும் ஒன்றின் நிலைகளன்களாகவே இருக்கின்றது. அந்த மன நிலைகளை இங்கு எடுத்துக் காட்டுவதாகவே இக்கட்டுரை அமைகிறது.

## அகத்திணை

சங்க இலக்கியத்தில் அகத்திணை என்பது ஒத்த அன்பினை உடைய தலைவன், தலைவியைப் பற்றியும் அவர்களுக்கு இடையில் முகிழ்க்கும் அன்பினையும் கூறுவதாக அமைந்துள்ளது. இவர்களே தலைமை மாந்தர்கள் எனப்படுகின்றனர். அன்பின் ஐந்திணைகளில் இவர்களது செயல்பாடுகளே கூறப்படுகின்றன. அகவாழ்வின் இன்றியமையாத உறுப்பானவர்கள் தலைவனும் தலைவியும் ஆவர். இவர்கள் சந்திப்பதும் கூடுவதும், அதனுடன் தொடர்புடைய செய்திகளான குறிமறுத்தல், தலைவன் சிறைப்புறத்தானாக நிற்க அவன் வரவை அறியாதார் போல தோழியும் தலைவியும் உரையாடுதல், வரைவு கடாவுதல், வேலன் வெறியாட்டெடுத்த அன்னையின் நிலை, அறத்தோடு நிற்றலை வலியுறுத்துதல் ஆகியவை குறிஞ்சித் திணையில் இடம் பெறுகின்றன.

இயற்கைப் புணர்ச்சி

காதல் உணர்வின் காரணமாக தலைவன், தலைவி இருவரும் சந்திக்கும் நிகழ்வு இயற்கைப் புணர்ச்சி எனப்படும். காமப்புணர்ச்சி என்பது தலைமகனுந் தலைமகளுந் தமியராய் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுத் தம்முணர்வினரன்றி வேட்கைமிகலினாற் புணர்வது'' என்று நக்கீரர், இறையனார் அகப்பொருளுக்கு உரை எழுதியுள்ளார்.

ஊழ்வலியால் ஒருவரையொருவர் கண்டு காதலித்து முதற்கூட்டம் பெற்ற பின்னர், தலைவனின் பிரிவை நினைத்து அஞ்சிய தலைவியைத் தேற்றும் வகையினாலே, தலைவன் கூறிய பாடல் ஒன்று குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது.

யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.[1]

முந்தைய பழக்கமற்ற நம்முடைய அன்பு கொண்ட நெஞ்சங்கள் தாமே தம்மிற் கலந்து ஒன்றுபட்டன இனி பிரிவு என்பது நிகழாது என்பதைத் தலைவன் கூறுவதாக இந்தக் குறுந்தொகையின் 40வது பாடல் அமைந்துள்ளது.

இடந்தலைப்பாடு

இடம் தலைப்பாடு என்பது அதே இடத்தில் மறுநாளும் இருவரும் எதிர்படுதல் ஆகும். தலைப்பாடு, தலைப்படுதல், கூடுதல், தலைவனும் தலைவியும் வினையினால் தலைபடுவதாகும். இங்ஙனம் கூடுவது இடந்தலைப்பாடு எனப்படும் என்று நா. சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை என்ற தனது நூலில் பக்கம்.110-ல் குறிப்பிட்டுள்ளார்.

ஒள் இழை மகளிரொடு ஓரையும் ஆடாய்,
வள் இதழ் நெய்தற் தொடலையும் புனையாய்,
விரி பூங் கானல் ஒரு சிறை நின்றோய்!
யாரையோ? நிற் தொழுதனெம்_வினவுதும்
கண்டோர் தண்டா நலத்தை- தெண் திரைப்
பெருங் கடல் பரப்பின் அமர்ந்து உறை அணங்கோ?
இருங் கழி மருங்கு நிலைபெற்றனையோ?
சொல்,இனி மடந்தை' என்றனென்: அதன் எதிர்
முள் எயிற்று முறுவல் திறந்தன;
பல் இதழ் உண்கணும் பரந்தவால், பனியே, [2]

இடந்தலைப்பாடு கொண்டு கூடுமாறு சென்ற தலைவன் தலைவியை நோக்கி நின்று வணங்கி கேட்டபின் நீதானொரு தெய்வமகளோ? வேறு யாரோ? என வினவியபோது நகை தோன்றியதாலும், கண் இமைத்ததாலும் மக்களைச் சார்ந்தவளே எனத் துணிந்தேன் என்பது ஆகும்.

பாங்கற் கூட்டம்

இயற்கை புணர்ச்சியில் காதல் கொண்ட தலைவனும் தலைவியும் மீண்டும் மீண்டும் சந்திக்க ஆவல் கொள்கின்ற இடம் இடந்தலைப்பாடு. நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, தாய் துஞ்சாமை, ஊரின் காவல் மிகுதி முதலியவற்றால் ஏற்படும் இடர்பாடுகளாலும் அல்ல குறி ஏற்படுவதாலும் இடந்தலைப்பாட்டில் இடையீடு ஏற்படுகிறது. மனவருத்தமும் இருவருக்கும் ஏற்படுகிறது.

வேறு வழி தெரியாத தலைவன் தான் கொண்ட காதலின் காரணமாக காதலியின் மீது பிதற்றல் உற்று மனம் வேறுபட்டு திரிகிறான். அதைக் கண்ட பாங்கன் தலைவனின் நிலையைக் கண்டு அவனைக் கடிந்துரைத்து திருத்துவதாக இருப்பதாகவும், வேறுவழியின்றி தோழனிடம் தனது காதல் நிலையைப்பற்றி கூறியதாக அமைவதாகவும் இருக்குமிடம் பாங்கற் கூட்டமாகும்.

அணங்கும் பிணியும் அன்றே; நினைப்பின்,
காமம் காமம் என்ப;காமம் முதைச்சுவற்
கலித்த முற்றா இளம்புல் மூதா தைவந் தாங்கு,
விருந்தே காமம் பெருந்தோ ளோயே![3]

கன்னியொருத்தி பாற் காமுற்று, அதனால் வேறுபட்ட தலைமகனைப் பாங்கன் கடிந்து உரைப்பவனாக இப்படிக் கூறுகின்றனன். இந்தப் பாடல் வழி காமம் மெய்யான இன்பம் அன்று என்பனவாம். பாங்கன் கூறுவதை மறுத்து உரைப்பதாக அகநானூற்றில் ஒரு பாடல் அமைந்துள்ளது.

நல்தோர் வழுதி கொற்கை முன்துறை
வண்டுவாய் திறந்த வாங்குழி நெய்தற்
போது புறங் கொடுத்த உண்கண் மாதர்
வாள்முகம் மதைஇய நோக்கே [4]

தலைவன் பாங்கனின் கூற்றை மறுத்து, தலைவியின் அழகைக் கண்டால் பாங்கன் இவ்வாறு கூற மாட்டான் என்று கூறுவதாக அமைந்த பாடல் இது. காதல் நோய் மிகுந்து பாங்கனிடம் தன் நிலையையும் மறந்து தலைவியின் மீதான காதலைப் பற்றி பிதற்றுபவனாக மாறுகிறான் தலைவன்.

பாங்கியற் கூட்டம்

882 பாடல்கள் களவு பற்றிய செய்திகளைத் கூறுவதாக அமைகின்றன. இவற்றுள் 842 பாடல்கள் தோழியின் கூட்டம் என்ற பாங்கியற் புணர்ச்சிக்குரியதாக அமைகின்றன்.

மதியுடம்படுதல்

தலைவனும் தலைவியும் ஒருவருக்கொருவர் காதல் கொண்ட செய்தியைத் தனது மதியினால் அறிந்துக் கொள்வதே பாங்கி மதியுடன்படுதல் எனப்படும். இது குறையுற உணர்தல், முன்னுற உணர்தல், இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் என மூவகைப்படும்.

குறையுறயுணர்தல்

தலைவியை வேண்டி பின்னின்ற தலைவன் அவளிடம் கூட முடியாத போது தோழியிடம் தன் நிலையைக் கூறி தலைவியைச் சேர்ப்பிக்க வேண்டும் என்று கூறுவதும் சில பாடல்களில் அவள் மறுப்பதும் அத்துடன் தன்னைச் சேர்ப்பிப்பார் யாருமில்லையே என்று தலைவன் வருந்துவதும் குறையுறவுணர்தல் வழி உள்ளது.

நல்உரை, இகந்து, புல்உரைத் தாஅய்
பெயல்நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி,
அரிதுஅவா வுற்றனை நெஞ்சே! நன்றும்
பெரிதால் அம்மநின் பூசல், உயர்கோட்டு
மகவுடை மந்திபோல
அகன்உறத் தழீஇக் கேட்குநர் பெரினே [5]

தாய்க்குரங்கு, தன் குட்டிக்கு உதவியதைப் போன்று பாச உணர்வுடன் தன் இயலாமையைப் புரிந்து செயல்படுபவர் ஒருவருமிலர் என்று வருந்துவதாக இந்தப் பாடல் அமைந்துள்ளது.

முன்னுறவுணர்தல்

தலைவனும் தலைவியும் கூடிய களவு வாழ்க்கையைப் பற்றி அவ்விருவரும் கூறாமலேயே தலைவியின் செயல் மாறுபாட்டினால் தோழி அறிந்துகொள்வது முன்னுற உணர்தல் ஆகும். தலைவிக்கு ஏற்படக்கூடிய தோற்ற வேறுபாடு, உண்டி சுருங்குதல், விளையாட்டுத் தன்மை இவற்றையெல்லாம் நோக்கி தோழி, தலைவியின் புணர்ச்சி இன்பத்தை அறிந்துக் கொள்கிறாள்.

நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
செய்வினை மறைப்பினும் செலவினம் பயில்வினும் [6]

என்னும் தொல்காப்பிய நூற்பா தலைவியின் தோற்ற வேறுபாடுகளைத் தோழி அறிந்துக் கொள்வதாக அமைந்துள்ளது.

குறை வேண்டல்

தன் குறை கூறித் தனக்கு உதவுமாறு தோழியைத் தலைவன் வேண்ட, அவள் அவனது களவுறவுக்குத் தான் உதவ இயலாது என மறுத்து விடுகின்றாள். மீண்டும் அவன் அவளிடம் வந்து குறைதீர்க்க வேண்டுவதும், இவளை விரைந்து வந்து மணந்து கொள்வாயாக என்று அவள் அவனுக்குச் சொல்வதாகவும் ஐங்குறுநூறின் 196 ஆம் பாடல் அமைந்துள்ளது.

கோடீர் எல்வளைக் கொழும்பல் கூந்தல்
ஆய்தொடி மடவரல் வேண்டுதி யாயின்
தெண்கழிச் சேயிறுப் படூஉம்
தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மோ! [7]

மடலேறுதல்

மடலேறுதல் என்பது தலைவன் தன்னை வருத்தும் உத்தி. அது காதலை விரைந்து நெருங்க வைக்கும் ஓலைக் குதிரை.[8]

மேலும், தலைவியை அடிக்கடி சந்திக்கத் தோழி வழிசெய்யாது விடினும், தலைவியின் பெற்றோர் மணம் மறுப்பினும் தலைவன் மடலேறத் துணிவான்'' [9]

மடல்மா ஊர்ந்து, மாலை சூடி,
கண்அகன் வைப்பின் நாடும் ஊரும்... [10]

தலைவியின் மீதான அன்பு அதிகமாக இருப்பதால் தன்னைக் காத்துக் கொள்ள இயலாமலும் தான் செய்ய வேண்டியதை அறியாமலும் மடல் ஏறவும் மனம் ஒப்பாமலும், இறந்துப்படவும் இயலாமலும் தலைவன் தவிக்கும் தவிப்பு இந்தப் பாடலில் காட்டப்பட்டுள்ளது.

தலைவி தோழிக்கு அறத்தோடு நிற்றல்

தலைவியின் உடல் வேறுபாடு கண்டு ஐயுற்ற தோழிக்குத் தலைவி ஒருத்தி, தலை மாலை அணிந்தும், வீரக்கழல் அணிந்தும், மாலையை அணிந்தவனுமாகிய காளை ஒருவன் வந்து உள்ளம் குளிரும் வரை எனது முதுகை அணைத்து தழுவி நின்ற அன்று முதல் அந்நிகழ்ச்சியை நினைத்து இருக்கிறேன். அதனால் இவ்வாறு நோயுற்றேன் எனக் கூறுகின்றாள்.

கண்ணியன், கழலன், தாரன், தண்ணெனச்,
சிறுபுறம் கவையினனாக, அதற்கொண்டு அஃதே நினைந்த நெஞ்சமொடு
இஃதா ஆகின்றுயான் உற்ற நோயே. [11]

மேற்கண்ட நிகழ்வுகளின் மூலம் தலைவனின் மனநிலையையும் அவனது மன நோயின் தன்மையையும் நன்கு உணர்ந்தவளாய் இருந்த தோழி தலைவியின் மன நிலையும் அவளது உடல் மன வேறுபாடுகளையும் காதல் நோயையும் அறிந்து அதற்கான தீர்வு என்ன என்பதையும் உணர்கிறாள். நோய்க்கு மருந்து இருவரையும் சேர்த்து வைப்பது மட்டுமே என்பதை உணர்ந்தவள் அவர்கள் இருவருக்குமான புணர்வு கூட்டங்களுக்குத் தகுந்த இடங்களை அமைக்கின்றாள்.

தொடர்ந்து களவே நிகழ்வதைத் தடுத்து களவு வாழ்க்கையானது, கற்பு வாழ்க்கையாக வேண்டும் என்பதையும் குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் தன்மை உடையவளாகத் தோழி விளங்கினாள் என்பதைக் கீழ்க்காணும் நிகழ்வுகளின் மூலம் நாம் அறிய காண்கின்றோம்.

குறியிடம் அமைத்தல்

களவு வாழ்க்கையின் முதல் மூன்று கூறுகள் நிகழ்ந்த பிறகு பாங்கியற் கூட்டம் நடைபெறுகிறது. தலைவனும் தலைவியும் புணர்கின்ற கூட்டங்கள் நடைபெறும் இந்நிலையில் தோழியின் முன்னெடுப்பு ஏற்படும்வரை தலைவியே குறியிடம் கூறுபவளாக இருந்துள்ளாள். இரவுக்குறி தலைவனைச் சந்தித்து வருபவள் இரவு குறியினால் ஏற்படும் துன்பங்களை உணர்ந்து பகல்குறி தலைவனை வரவைக்கிறாள். பகலிலும் துன்பங்கள் நேரும் இடங்களிலும் அல்ல குறி ஏற்படும் இடங்களிலும் தோழியின் உதவியை வேண்டி நிற்கின்றாள் தலைவி.

இந்நிலையில் தலைவி, தலைவனுடனான தனது காதல் வாழ்க்கைக் குறித்து தோழிக்கு அறத்தொடு நிற்கின்றாள். தலைவியின் மன நிலையை உணர்ந்து அவர்களது நல்வாழ்விற்குத் துணை நிற்கிறாள் தோழி

குறியிடம் கூறல்

அன்பின் ஐந்திணையாகிய ஐந்து திணைகளிலும் தோழியின் துணையால் தலைவனுக்கும் தலைவிக்கும் புணர்வு ஏற்படுகின்ற இடம் குறியிடமாகும்.

இரவுக்குறி கூறுதல்

இரவுக் குறியே இல்லகத் துள்ளும்

மனையோர் கிளவி கேட்கும்வழி அதுவே;
மனையகம் புகாஅக் காலையான [12]

என இரவுக்குறி குறித்துத் தொல்காப்பியர் கூறுகிறார். இரவு குறியானது வீட்டிற்கு அண்டையிலே நடைபெறும் குறியாக உள்ளது. இரவுக்குறியில் தலைவன் வரும் வழியின் தன்மையும் காவல் மிகுதியையும் கண்டு இரவுக்குறி மறுப்பதும் உண்டு.

பகற்குறி

பகற்புணர் களனே, புறனென மொழிப
அவளறிவுணர வருவழியான [13]

எனப் பகற்குறி குறித்துத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

பகற்பொழுதில் தலைவன் வந்து செல்கின்ற நேரத்தில் ஏற்படும் அலரினாலும், இற்செறிக்கப்படுவதாலும் பகற்குறி மறுக்கப்படுகிறது. களவின் ஒரு கட்டத்தில் இரவுக்குறி மற்றும் பகற்குறி இரண்டும் மறுக்கப்பட்டு வரைவு கடாவப்படுகிறது.

முடிவுரை

தெய்வப் புணர்ச்சி, காமப் புணர்ச்சி எனப்படும் இயற்கைப் புணர்ச்சியில் யாரது முயற்சியும் இன்றி தலைவனும் தலைவியும் ஒருவரின் மீது ஒருவர் காதல் கொள்கின்றனர். தலைவனுக்கும் தலைவிக்கும் ஏற்பட்ட காதல் உணர்வாலும் மீண்டும் மீண்டும் இருவரும் சந்திக்க பல வழிகளில் முயற்சி செய்கின்றனர். களவுக் கூட்டம் தொடங்குகின்ற இந்தக் காலத்தில் தலைவனுக்கும் தலைவிக்கும் ஏற்படுகின்ற காதல் நோயின் மூலக்காரணம் இருவரும் ஒருவரை ஒருவர் புணராமல் இருப்பதுதான் என்பதனை உணர்ந்து அது தனி விக்க இருவருக்கும் குறியிடத்தை அமைத்து தந்துள்ளாள் தோழி.

நோய் நாடி (காதல் நோய் என்பதை அறிந்துகொண்டு) நோய் முதல் நாடி (அந்த நோய்க்கான காரணம் புணர்வு மறுக்கப்பட்டது தான் என்பதை உணர்ந்து கொண்டு)அது தணிக்கும் வாய் நாடி (அந்தக் காதல் நோயினைத் தனிவிப்பதற்கு அவர்களைத் திருமண வாழ்க்கையில் ஈடுபடுத்தும் முதல்கட்ட செயலாக புணர்வு இன்பத்தை ஏற்படுத்தும் குறியிடம் அமைத்துக் கொடுத்தல், மேலும் குறியிடம் நீடிக்காமல் வரைவு என்ற நிகழ்வும் தொடர்ந்து நடைபெறுகிறது) தான் ஒரு மருத்துவராக செயல்பட்டு காதல் நோயினைப் போக்குகின்றவளாக சங்க இலக்கியத் தோழி இருந்துள்ளாள் என்பதை நாம் இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. குறுந்தொகை.40
2. நற்றிணை-155
3. குறுந்தொகை.204
4. அகம்: 130,11-14
5. குறுந்தொகை.29
6. தொல்.களவு.112
7. ஐங்குறுநூறு 196
8. சுந்தர ஆவுடையப்பன், சங்கச் செவ்வி. ப.80
9. சு.சண்முக சுந்தரம், சங்க இலக்கிய வரலாறு, ப. 18
10. நற்றிணை 377
11. நற்றிணை. 128
12. தொல்.பொருள்.129
13. தொல் பொருள்.130

********* ********* ********** ********* ********* ********** ********** **********